**வரையறுக்கப்பட்ட லங்கா அரச தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் (தனியார்) கம்பனி -2017**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

வரையறுக்கப்பட்ட லங்கா அரச தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் (தனியார்) கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2016 மற்றும் 2017 இன் கம்பனியின் ஒன்றிணைந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை கம்பனியின் தலைவருக்கு 2018 நவம்பர் 13 ஆந் திகதி வழங்கப்பட்டது. 2017 இன் விரிவான அறிக்கை கம்பனியின் தலைவருக்கு 2019 திசெம்பர் 26 ஆந் திகதி வழங்கப்பட்டது. கம்பனியின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை 2019 பெப்ரவரி 22 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய

கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.4 **மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------

(அ) பேரேட்டுக் கணக்குகள் காணப்பட்ட போதிலும் பேரேட்டுக் கணக்குகளில் பதிவுகளை மேற்கொள்ளாமல் திறைசேரி மானியம், தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள், பணிக்கொடைக்கான ஏற்பாடு, பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடுகள் என்பவற்றின் கூட்டுத்தொகையான ரூபா 22,466,318 நேரடியாக பரீட்சை மீதியிலும், நிதிக்கூற்றுக்களிலும் சீராக்கப்பட்டிருந்தன.

(ஆ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 77,340,402 ஆக இருந்தது. எனினும் கம்பனியினால் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் விரிவான பட்டோலைகள் முறையாகப் பேணிச் செல்லப்படாமையினால் அந்த மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பௌதீக மெய்மெய்யாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் பெறுமானத் தேய்வுகளுக்கான ஒதுக்கீடு அருகிச் செல்லும் மீதி முறையாகும். எனினும் பெறுமானத் தேய்வுக் கணிப்பீடு நேர் கோட்டு முறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 63 ஆம் பந்தியின் பிரகாரம் இழப்பீடாகின்ற நட்டங்கள் இனங்காணப்பட வேண்டும். எனினும் கம்பனியால் ஆதனங்கள், பொதிகள் மற்றும் உபகரணங்களுக்காக இழப்பீட்டுப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு தேவையான கணக்கீட்டு தீர்வுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 55 ஆம் பந்திக்கு முரணாக பணிக்கொடை கொடுப்பனவிற்கான கடப்பாடுகள் ரூபா 1,767,500 தொகை கம்பனியால் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கும் போது மொத்தமாக சேவையாற்றிய வருடங்களின் எண்ணிக்கைக்காக மீளாய்வாண்டின் இறுதி மாத சம்பளத்தில் அரைவாசி சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டிருக்கின்றது.

(எ) மானிய பெறுவனவுகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2017 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 4,199,121 தொகையான மானிய சொத்துக்களுக்கான பிற்போடப்பட்ட பொறுப்பின் சரியான தன்மை மற்றும் 3,965,388 பெறுமதியொன்று வருமானக் கூற்றிற்கு மாற்றும் அடிப்படை என்பவற்றை கணக்காய்விற்கு வெளிப்படுத்த முடியாதிருந்தது.

(ஏ) மாதாந்த பொழிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டின் சம்பளம் மற்றும் படிகள் ரூபா 18,682,433 ஆகும். எனினும் விரிவான வருமானக்கூற்றின் பிரகாரம் அது ரூபா 7,755,183 ஆக இருந்தது. இதன் விளைவுகளாக மீளாய்வாண்டின் சம்பளம் மற்றும் படிகள் ரூபா 10,927,250 இனால் குறைவாக காண்பிக்கப்படுகின்றது. மேலும் தாய்க் கம்பனியால் செலுத்தப்பட்ட கம்பனியின் சம்பளம் மற்றும் படிகள் நடைமுறைக்

கணக்கு ஊடாக கம்பனியின் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதனால் இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மையின் தாய்க் கம்பனியுடன் உள்ள நடைமுறைக் கணக்கு மீதியும் அதற்கு சமமான அளவினால் குறைக்கப்பட்டிருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் எனது பரிசோதனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் பிரகாரம் சரியான கணக்கறிக்கைகள் கம்பனியால் பேணப்பட்டிருக்கவில்லை.

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காண்பிக்கப்படுகின்ற தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன என்பதும் எனது அபிப்பிராயம் ஆகும்.